Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم     نحمده ونصلي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

8 துல்ஹஜ் 1438 ஹிஜ்ரி கமரி     31 ஸஹுஉர் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

31 ஆகஸ்டு 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஉஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஉஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**டெபுடி அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பான முன்னறிவிப்பு மிகவும் தெளிவாக நிறைவேறி விட்டது. அத்தகைய தெளிவான அடையாளங்களைப் பற்றி ஆட்சேபனை செய்வதிலிருந்து விலகாமல் இருக்கின்ற அத்தகைய உள்ளங்கள் மீது இறைவனின் சாபம் இருக்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹுஉம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

***இருபத்தி மூன்றாவது அடையாளம்:*** டெபுடி அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பான முன்னறிவிப்பாகும். அது மிகவும் தெளிவாக நிறைவேறி விட்டது. இது உண்மையில் இரண்டு முன்னறிவிப்புகளாக இருந்தது. முதலாவது முன்னறிவிப்பு, ‘அவர் பதினைந்து மாதங்களுக்குள் மரணித்து விடுவார்’ என்பதாகும். இரண்டாவது முன்னறிவிப்பு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஜ்ஜாலாக இருந்தார்கள் (நவூதுபில்லாஹ் - அல்லாஹ் நம்மை காப்பானாக.) என்று அவர் வெளியிட்டிருந்த தனது கூற்றிலிருந்து அவர் விலகி விட்டால் அந்நிலையில் அவர் பதினைந்து☆ மாதங்களுக்குள் மரணிக்க மாட்டார் என்பதாகும். மேலும் ஏற்கனவே நான் எழுதியிருந்தது போன்றே மரணம் பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படை இவ்விஷயத்தில் இருந்தது. அதாவது ஆத்தம் அந்துரூனா பைபிள் என்ற பெயரிலுள்ள தனது நூல் ஒன்றில் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தஜ்ஜால் என்று கூறியிருந்தார். முன்னறிவிப்பில் ஆத்தம் மரணமடைவதற்கு பதினைந்து மாதங்களுக்கான கால அளவு கூறப்பட்டிருந்தது. ஆனால் அத்துடன் இந்த நிபந்தனையும் கூறப்பட்டிருந்தது. அதன் சொற்கள் இவையாகும்: அதாவது ‘நிபந்தனை என்னவென்றால் அவர் உண்மையின் பக்கம் திரும்பாமல் இருக்க வேண்டும்’. ஆத்தம் அந்த சபையிலேயே (உண்மையின் பக்கம்) திரும்பி விட்டார். மிகவும் பணிவுடன் தனது நாவை வெளியில் தொங்கவிட்டு இரு காதுகளிலும் தனது கைகளை வைத்தவாறு (பெருமானார் ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்களை) தஜ்ஜால் என்று கூறியதற்காக தனது வெட்கத்தை வெளிப்படுத்தினார். இந்த விஷயத்தில் ஒருவரல்ல; இருவரல்ல. மாறாக அறுபது அல்லது எழுபது மனிதர்கள் சாட்சிகளாவர். அவர்களில் ஏறக்குறைய பாதி பேர் கிறித்தவர்கள் ஆவர். ஏறக்குறைய மீதியிருந்த பாதி பேர் முஸ்லிம்கள் ஆவர். அவர்களில் ஏறக்குறைய ஐம்பது பேர் இப்போது வரை உயிருடன் இருப்பர் என்று நான் கருதுகின்றேன். அவர்களின் முன்னிலையில் ஆத்தம் (பெருமானார் ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்களை) தஜ்ஜால் என்று கூறிவதிலிருந்தும் விலகி (உண்மையின் பக்கம்) திரும்பி விட்டார். பிறகு அவர் மரணிக்கின்ற நேரம் வரை அத்தகைய சொல்லை நாவில் கொண்டு வரவில்லை. எழுபது மனிதர்களின் முன்னிலையில், தஜ்ஜால் என்று கூறியதிலிருந்து ஆத்தம் விலகி இவ்வாறு பகிரங்கமாக உண்மையின் பக்கம் திரும்பிய பிறகும் கூட அவர் உண்மையின் பக்கம் திரும்பவில்லை என்று கூறுவது எந்த அளவு தீய இயல்புள்ள மற்றும் தீமையுடன் நடந்து கொள்கின்ற ஈமான் இல்லாத நிலையாக இருக்கின்றது என்பதை இப்போது சிந்தனை செய்ய வேண்டும். இறை கோபத்திற்கான முழு அடித்தளமும் தஜ்ஜால் என்ற சொல்லில்தான் இருந்தது. இதன் அடிப்படையில்தான் முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இதே சொல்லை கூறுவதிலிருந்து விலகி

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

☆ இந்த விஷயம் பற்றி ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு புரிந்திருக்கும். அதாவது ஆத்தமிற்கு இறையறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் வழங்கப்பட்ட கால அவகாசத்திற்காக எவ்விதத்திலும் நன்றி செலுத்தவில்லை. மாறாக, துன்பம் தலையை விட்டு அகன்று சென்று விட்டது என்று கருதியவாறு அவர் உண்மையை மறைத்தார். நான் பயப்படவில்லை என்று கூறினார். இறைவன் மீது சத்தியம் செய்து கூறவும் மறுத்து விட்டார். ஆனால், கிறித்தவ மதத்தின் எல்லா சான்றோர்களும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறியிருக்கின்றனர். பைபிளிலிருந்தும் சுயமே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவன் மீது சத்தியம் செய்து கூறியிருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பவுலும் இறைவன் மீது சத்தியம் செய்துள்ளார். பேதுருவும் இறைவன் மீது ஆணையிட்டுள்ளார். எனவே, அவர் உண்மையை மறைத்த பிறகு இப்போது அவர் விரைவில் மரணித்து விடுவார் என்று இறைவன் எனக்கு வெளிப்படுத்தினான். அப்போது நான் இது தொடர்பாக ஒரு பிரசுரத்தை வெளியிட்டேன். வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், நான் இந்த இரண்டாவது இல்ஹாமின் அடிப்படையில் அவரது மரணம் தொடர்பாக செய்தி வெளியிடப்பட்டிருந்த அந்த பிரசுரம் வெளி வந்த நாளிலிருந்து பதினைந்து மாதங்களுக்குள் அவர் மரணித்து விட்டார். ஆத்தம் உண்மையின் வழியைக் கை விட்டு விட்டு உண்மையை மறைத்ததனால் இறைவன் அவருக்கு அதே பதினைந்து மாத கால அளவை நிர்ணயித்திருந்தான். இதைப் பற்றி தான் நமது எதிரிகளின் வீட்டில் ஒப்பாரியும் அழுகையும் நிலவுகின்றது.

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுஉல்லாஹுஉத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 123 -வது காதியான் ஆண்டு மாநாட்டை 2017 டிசம்பர் 29, 30 மற்றும் 31 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகும் பணிகளை செய்ய ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அருள்களைப் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாவதற்காகவும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கு காரணமாக இருப்பதற்கும் சகோதரர்கள் அனைவரும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ். (தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் அருளால் U.K ஆண்டு மாநாடு இன்று ஆரம்பமாகின்றது. இந்நாட்களில் துஆக்கள் செய்வதில் அதிக அழுத்தம் கொடுங்கள். மேலும் அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவதற்கு தான தருமங்கள் செய்ய வாய்ப்பு பெற்றவர்கள் தான தர்மமும் செய்யுங்கள். இங்கு நேரடியாக மாநாட்டில் கலந்து கொண்டிருப்பவர்களும், உலகின் பல்வேறு நாடுகளில் M.T.A மூலமாக மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற அஹ்மதிகளும் எல்லா வகையிலும் மாநாடு வெற்றி பெறுவதற்காகவும், எதிரியின் எல்லா தீங்கிலிருந்தும் நாம் பாதுகாப்பாக இருப்பதற்கும் துஆ செய்து வாருங்கள்.

கடந்த குத்பாவில் நான் விருந்தோம்பல் செய்கின்ற தொண்டர்களுக்கு மாநாட்டில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். இன்று நான் சுருக்கமாக, விருந்தினருக்குள்ள சில கடமைகள் மற்றும் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். அதனை அவர்கள் செயல்படுத்த வேண்டும்.

நிச்சயமாக இஸ்லாத்தில் விருந்தினர்களுக்கு பெரும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இஸ்லாம் ஒரு தரப்பிற்கு மட்டுமே அவர்களின் பொறுப்பின் பக்கம் கவனமூட்டி அறிவுரை வழங்கும் மார்க்கம் அல்ல. மாறாக நடுநிலையைப் போதிக்கும் மார்க்கமாகும். இன்னும் சொல்லப்போனால், நீங்களும் உங்களின் கடமைகளைச் செலுத்துங்கள் என இரண்டாம் தரப்பிற்கும் அது அறிவுரை செய்கின்றது. மேலும் உங்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ள உரிமைகளை பிறருக்கு வழங்குங்கள் என்றும் இஸ்லாம் கூறுகிறது. ஏனெனில் இதன் மூலம் மட்டுமே அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான சமூகம் நிலைபெறுவதற்கு அது காரணியாக அமைய முடியும்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கம் என்பது இறையச்சத்தில் முன்னேற்றம் காண்பது, இறை தொடர்பில் முன்னேறுவது, ஒருவர் மற்றவருடைய உரிமைகளைச் செலுத்துவது மற்றும் ஒருவர் மற்றவருக்காக தனது தியாக மனப்பான்மை மற்றும் அதன் தரத்தை உயர்த்துவது போன்றவையாகும்.

மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய விருந்தாளி மாநாட்டில் கலந்து கொள்ள வரும்போது விருந்தாளியாக மட்டும் இருப்பதில்லை. ஒரு விருந்தினராக தன்னுடன் மற்றவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளப்படுதலையும், சுக போகங்களுக்குமான எதிர்பார்ப்பையும் மட்டுமே வைத்தல் கூடாது. மாறாக தியாக மனப்பான்மையின் உயர் தரத்தை பெறக் கூடியவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும். மாநாடு நடத்துவதற்கான அசல் நோக்கம் எப்பொழுதும் அவர்களின் கண்முன் இருத்தல் வேண்டும். நான் கூறியது போன்று அல்லாஹ்வுடன் தொடர்பும், ஆன்மீக முன்னேற்றமும் ஒருவர் மற்றவரின் உரிமைகளைச் செலுத்துவதுமே மாநாட்டின் நோக்கங்களாகும்.

ஜமாஅத் அல்லாத விருந்தினர்களைப் பொருத்தவரை நாம் நிச்சயமாக அவர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், நமது வசதி வாய்ப்பிற்கேற்ப முடிந்தவரை விருந்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும், விருந்து உபசரிப்பையும் நல்ல முறையில் செய்தல் வேண்டும். ஓர் அஹ்மதி ஜல்ஸாவில் கலந்து கொள்ள வருகை தரும்போது அவர் தன்னை விருந்தினராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும் கருத வேண்டும். அப்போதுதான், தியாக மனப்பான்மை அதிகரிக்கும். அதன் மூலம் மாநாட்டின் சூழல் அமைதி மற்றும் அன்பு நிறைந்த சூழலாக மாறி விடும்.

ஆண்டு மாநாட்டிற்கு வரவிருக்கின்ற விருந்தினர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிக முக்கிய அறிவுரைகளைக் கூறினார்கள். மாநாடு நடைபெறும்போது கடைவீதி மற்றும் கண்காட்சிகளின் நிலை பற்றியும் ஏனைய ஏற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டவாறு விருந்தினர்களும் விருந்தோம்பல் செய்பவர்களும் பல்வேறு விஷயங்கள் தொடர்பாக குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் ஆல்ட்டனிலுள்ள ஹதீகத்துல் மஹ்தி மாநாட்டுத் திடலில்**
**27 ஜுலை 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **28 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் அருளால் U.K ஆண்டு மாநாடு இன்று ஆரம்பமாகின்றது. இந்நாட்களில் துஆக்கள் செய்வதில் அதிக அழுத்தம் கொடுங்கள். மேலும் அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவதற்கு தான தருமங்கள் செய்ய வாய்ப்பு பெற்றவர்கள் தான தர்மமும் செய்யுங்கள். இங்கு நேரடியாக மாநாட்டில் கலந்து கொண்டிருப்பவர் –களும், உலகின் பல்வேறு நாடுகளில் M.T.A மூலமாக மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற அஹ்மதிகளும் எல்லா வகையிலும் மாநாடு வெற்றி பெறுவதற்காகவும், எதிரியின் எல்லா தீங்கில் இருந்தும் நாம் பாதுகாப்பாக இருப்பதற்கும் துஆ செய்து வாருங்கள்.

கடந்த குத்பாவில் நான் விருந்தோம்பல் செய்கின்ற தொண்டர்களுக்கு மாநாட்டில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். இன்று நான் சுருக்கமாக, விருந்தினருக்குள்ள சில கடமைகள் மற்றும் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். அதனை அவர்கள் செயல்படுத்த வேண்டும். நிச்சயமாக இஸ்லாத்தில் விருந்தினர்களுக்கு பெரும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இஸ்லாம் ஒரு தரப்பிற்கு மட்டுமே அவர்களின் பொறுப்பின் பக்கம் கவனமூட்டி அறிவுரை வழங்கும் மார்க்கம் அல்ல. மாறாக நடுநிலையைப் போதிக்கும் மார்க்கமாகும். இன்னும் சொல்லப்போனால், நீங்களும் உங்களின் கடமைகளைச் செலுத்துங்கள் என இரண்டாம் தரப்பிற்கும் அது அறிவுரை செய்கின்றது. மேலும் உங்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ள உரிமைகளை பிறருக்கு வழங்குங்கள் என்றும் இஸ்லாம் கூறுகிறது. ஏனெனில் இதன் மூலம் மட்டுமே அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான சமூகம் நிலை பெறுவதற்கு அது காரணியாக அமைய முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை அதிருப்தியடைந்து மாநாடு நடத்தவில்லை. அந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் தவறான நடத்தையே அதற்குக் காரணம் எனவும் கூறினார்கள். அதாவது வந்திருந்த விருந்தினர்கள் தனது கடமைகள் மற்றும் உரிமைகளைச் சரிவர செலுத்தாததன் விளைவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அதிருப்தி மற்றும் கோபத்திற்குக் காரணமாக அது இருந்தது. ஜல்ஸாவில் கலந்து கொண்ட மக்களின் மூலமாக நேரடியாக துன்பங்கள் ஏற்பட்டு அதன் மூலம் அன்னார் கோபத்தை வெளிப்படுத்தவில்லை. மாறாக, மாநாட்டில் கலந்து கொண்டுள்ள நீங்கள் ஒருவர் மற்றவருக்குரிய உரிமையை வழங்குவதில்லை என்று கூறினார்கள். ஒருவர் மற்றவருக்குரிய உரிமையை வழங்கவில்லை என்பது மட்டுமல்ல. மாறாக, சுயநலத்துடன் செயல்படுகின்றீர்கள்.

பிறரின் நலனை விட உங்களின் நலனுக்கே முன்னுரிமை வழங்குகின்றீர்கள். மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கம் என்பது இறையச்சத்தில் முன்னேற்றம் காண்பது, இறை தொடர்பில் முன்னேறுவது, ஒருவர் மற்றவருடைய உரிமைகளைச் செலுத்துவது மற்றும் ஒருவர் மற்றவருக்காக தனது தியாக மனப்பான்மை மற்றும் அதன் தரத்தை உயர்த்துவது போன்றவை ஆகும்.

இந்த தரத்திற்கேற்ப சிலரின் நிலைகள் இல்லாததை அன்னார் கண்டபோது அன்னாருக்கு பெரும் துன்பம் ஏற்பட்டது. அதனை அன்னார் வெளிப்படையாகவே கூறினார்கள். (ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 394-395)

எனவே மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய விருந்தாளி மாநாட்டில் கலந்து கொள்ள வரும் போது விருந்தாளியாக மட்டும் இருப்பதில்லை. ஒரு விருந்தினராக அவர்கள் தன்னுடன் மற்றவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதையும், சுக போகங்களுக்குமான எதிர்பார்ப்பையும் மட்டுமே வைத்தல் கூடாது. மாறாக தியாக மனப்பான்மை –யின் உயர் தரத்தை பெறக் கூடியவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும். மாநாடு நடத்துவதற்கான அசல் நோக்கம் எப்பொழுதும் அவர்களின் கண்முன் இருத்தல் வேண்டும். நான் கூறியது போன்று அல்லாஹ்வுடன் தொடர்பும், ஆன்மீக முன்னேற்றமும் ஒருவர் மற்றவரின் உரிமைகளைச் செலுத்துவதுமே மாநாட்டின் நோக்கங்களாகும்.

ஜமாஅத் அல்லாத விருந்தினர்களைப் பொருத்தவரை நாம் நிச்சயமாக அவர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், நமது வசதி வாய்ப்பிற்கேற்ப முடிந்தவரை விருந்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும், விருந்து உபசரிப்பையும் நல்ல முறையில் செய்தல் வேண்டும். குறிப்பாக, சில சமுதாயங்களின் தலைவர்கள் விருந்தினர்களாக வந்துள்ளனர். அவர்கள் விருந்தினர்களாக வந்திருப்பதைப் பொருத்தவரை சிறப்பான கவனத்துடன் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும். ஏனெனில், அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலும் ஆகும். சமுதாயத்தின் தலைவர்கள் உம்மிடம் வந்தால் அவர்களுக்குக் கண்ணியமளித்து மரியாதை செலுத்துங்கள். அவர்களுக்கு விருந்தோம்பல் செய்யுங்கள் என அன்னார் கூறினார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுல் அதப் பாபு இதா ஜாஅகும் கரீமு கவ்மின் ஃப அக்ரி மூஹு ஹதீஸ் 3712)

அதேபோன்று உண்மையைத் தேடி வரக் கூடியவர்கள் உள்ளனர். அவ்வாறு நிறைய பேர் வருகின்றனர். அப்படி வருபவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு முழுமையான முறையில் விருந்து உபசரிப்பு செய்யப்பட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயத்தையே நமக்கு புரிய வைத்துள்ளார்கள்.

அன்னார், தனது விருந்தினர் இல்லத்தின் ஊழியர்களுக்கு இவ்வாறே அறிவுரை செய்து வந்தார்கள். நீங்கள் ஒருவரை அறிந்திருந்தாலும் சரி, அறியா விட்டாலும் சரி, அவர் பணக்காரராக இருக்கட்டும் அல்லது ஏழையாக இருக்கட்டும். நீங்கள் அனைவருக்கும் விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 226) ஓர் அஹ்மதி ஜல்ஸாவில் கலந்து கொள்ள வருகை தரும்போது அவர் தன்னை விருந்தினராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும் கருத வேண்டும். அப்போதுதான், தியாக மனப்பான்மை அதிகரிக்கும். அதன் மூலம் மாநாட்டின் சூழல் அமைதி மற்றும் அன்பு நிறைந்த சூழலாக மாறி விடும். விருந்தினர், வீட்டின் உரிமையாளர்களுக்குக் கஷ்டத்தை தரக் கூடாது. மாறாக, வசதிக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் ஆகும். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதப் பாபு இக்ராமிஸ் ஸய்ஃபி ஹித்மதஹு ஹதீஸ் 6135)

மாநாட்டின் நாட்களில் இந்த இடத்தில் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக இங்கு தங்குபவர்களுக்கு நிரந்தரமான தங்குமிடத்தில் செய்யப்படும் ஏற்பாடுகளை செய்து தர முடியாது. இங்கு கூட்டாக தங்குமிடமும் அமைக்கப்பட்டுள்ளது. கூடாரங்களில் குடும்பங்கள் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளில் அதிகமான குறைகளும் இருக்கக் கூடும். மாநாட்டில் வரக்கூடிய விருந்தினர்களுக்கு ஜமாஅத்தின் விருந்தோம்பல் துறை வீடு என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. எனவே ஜமாஅத்தின் இந்த துறைகள் நமக்கு தொண்டாற்ற நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களிடம் ஏதும் பலவீனமோ குறைகளோ இருந்தால் நாம் விரும்பியதை அவர்களிடம் பேசுவதற்கும் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நாம் உரிமை படைத்திருக்கிறோம் என்ற எண்ணம் ஒருவரிடம் இருக்குமென்றால் அது தவறான எண்ணமாகும். ஜமாஅத் தொண்டில் ஈடுபட்டுள்ள இந்த ஆண், பெண் தொண்டர்கள் நமது ஊழியர்கள் ஒன்றுமல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்கு அவர்கள் தம்மைத் தாமே முன்னிருத்தி இருப்பது அவர்களின் பணிவு மற்றும் தொண்டிற்கான உணர்வாகும். இந்த தொண்டர்களில் மிகவும் நன்கு படித்த மக்களும் செல்வந்தர்களும் உள்ளனர். எனவே விருந்தோம்பல் செய்பவர்களுடன் மென்மை, மற்றும் அன்புடன் பரிமாறி தனது தேவைகளைக் கூற வேண்டும். தன்னார்வத் தொண்டர், நிர்பந்தத்தின் காரணமாக உங்கள் கோரிக்கையை நிராகரித்து விட்டால் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று நமத இளைஞர்களும், இளம் பெண்களும் மிகவும் உணர்வுப்பூர்வமாக டியூட்டி கொடுக்கின்றனர். சில முறை சில பெரியவர்களின் தவறான நடத்தை மற்றும் பேசும் விதம் ஆகியவற்றால் இந்த இளைஞர்களுக்கு பெரும் தடுமாற்றம் ஏற்படுகின்றது. இந்த பெரியவர்கள் அவர்களின் தடுமாற்றத்திற்குக் காரணமாகி விடுகின்றனர். அந்த அடிப்படையிலும் ஒவ்வொருவரும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியவர்கள், சிறியவர்களிடம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும். வரக்கூடிய ஒவ்வோர் அஹ்மதி விருந்தினரும் நான் கூறியது போன்று தம்மை விருந்தாளியாக நினைத்துக் கொள்ளக் கூடாது. மாறாக, மாநாட்டில் கலந்து கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களுக்கு நாம் வாரிசாக வேண்டும் என்பதே மாநாட்டின் அசல் நோக்கம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மாநாட்டின் அருள்களிலிருந்து பயன் பெற வேண்டும். நமது ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண்பதே உங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இதனைத் தவிர்த்து சுகபோகங்கள் மற்றும் சின்னஞ்சிறிய விஷயங்களுக்கு பின்னால் சென்று தனது நேரத்தை வீணடிக்கக் கூடாது. உங்களின் சுற்றுப்புறச் சூழல் கெட்டுப்போக அனுமதிக்க கூடாது. ஆயினும், மீண்டும் தொண்டர்களிடம் கூறுவேன். என்ன நிலைமை ஏற்பட்டாலும், ஒருவரின் நடத்தை எப்படி இருந்தாலும் சரி, நீங்கள் நல்லொழுக்கத்தையும் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். இந்த மூன்று நாட்களில் விருந்தினர்களுக்கு உண்பதற்கு என்ன வழங்கப்பட்டாலும் மகிழ்ச்சியுடன் அதனை சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். பாருங்கள்! சில துறைகளில் அதிகாரிகளாக இருக்கும் சிலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதில் அருள் உள்ளது என்பதற்காக மட்டும் விடுமுறை எடுத்துக் கொண்டு ஆர்வத்துடனும், உணர்வுடனும் உணவு சமைப்பதற்கான தொண்டினைக் கூடச் செய்கின்றனர். இது எவ்வளவு பெரிய உணர்வாகும். எனவே உணவின் சுவையில் கூடுதல் குறைவு இருந்தால் புகார் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆயினும் உணவு பரிமாறும் தொண்டர்களும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, ஒருவருக்கு உணவு வழங்கும்போது கண்ணியத்துடன் வழங்க வேண்டும். ஒருவர் பத்து முறை கறிக்குழம்பு கேட்டாலும் கூட தனது விருப்பத்திற்கேற்ப குழம்பை பெற விரும்பினாலும் கூட அவருக்கு அதனை வழங்கி விடுங்கள்.

சில முறை உணவு பரிமாறும் இடத்தில் சின்னச்சின்ன விஷயத்திற்காக விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கின்றன. அதனை தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். அதைபோன்று விருந்தினர்கள் உணவு உண்டு விட்டு எவ்வளவு விரைவாக உணவுக் கூடாரத்தை விட்டு வெளியேற முடியுமோ வெளியேறி விடுங்கள். அந்நிலையில் மற்ற மக்களும் விரைவாக சென்று உணவு உண்ண ஏதுவாக இருக்கும். ஒரே நேரத்தில் அதிகதிகமான நபர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்பதே மாநாட்டு அமைப்பாளர்களின் முயற்சியாக இருக்கும். இடத்தையும் அதற்கேற்ப விரிவுபடுத்தி அமைப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. ஆயினும், நெரிசல் ஏற்பட்டு கஷ்டம் நேரிட்டு விடுகிறது. விருந்தினர்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் அந்த பிரச்சனை எளிதாகி விடும். விருந்தினர்களின் மற்ற வசதிகளும் குளியலறை போன்றவற்றை சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்க முயற்சி

செய்யப்படுகின்றது. ஆனால், நான் கூறியது போன்று தற்காலிக ஏற்பாட்டின் காரணமாக, சிலமுறை விருந்தினர்களுக்கு கஷ்டமும் துன்பமும் நேரிடுகின்றது. இதனை சகித்து கொள்ள வேண்டும்.

இரவில் எனக்கு அறிக்கை கிடைத்தது. குளியலறைக்குச் செல்லும் ஒரு பைப் லைன் உடைந்து விட்டதாகவும், அதனால் அடைப்பு ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. அதனால் கஷ்டம் ஏற்பட்டு சிறிது நேரம் பைப் லைன் சப்ளையை நிறுத்த நேரிட்டது. மாநாட்டு அமைப்பு நிரந்தரமாக அதனை சரி செய்ய முயற்சி செய்கின்றதுதான். ஆயினும், விருந்தினர்களுக்கு இதில் மேலும் சில சிரமம் ஏற்படக் கூடும். இது மட்டுமல்லாமல் நான் கடந்த குத்பாவிலும் கூறியிருந்தேன். போக்குவரத்து மற்றும் பார்கிங் ஏற்பாடுகளில் வசதிகளைக் கருத்தில் கொண்டு சில மாற்றங்கள் இம்முறை செய்யப்பட்டுள்ளன. எனக்கு கிடைத்த இதுவரையிலான அறிக்கையின் அடிப்படையில் இதனால் நன்மை கிடைத்து வருகிறது. இதுவரை ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் அல்லது சிக்கல் இந்த முறை குறைந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால் போக்குவரத்து சிறப்பாக உள்ளது. ஆயினும் பார்கிங் மற்றும் போக்குவரத்து துறை சார்ந்தவர்களுடன் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். எங்கு எப்படி கார்கள் மற்றும் நபர்களை வரிசையில் நிற்கும்படி கூறப்படுமோ அப்படி வரிசையில் நிற்க வேண்டும்.

நான் கூறியதுபோன்று கார் பார்கிங் வசதிக்காக பெரிய இடம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. அங்கிருந்து பேருந்துகளில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவர். அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குங்கள். ஒத்துழைப்பு இருந்தால் எந்த போக்குவரத்து நெரிசலும் இன்றி எளிதாக வந்தடைய முடியும். பொதுவாக கடந்த ஆண்டுகளில் ஜுமுஆ நாளன்று மக்கள் மிகத் தாமதமாக வந்தனர். இன்னும் சொல்லப்போனால் கடைசி நேரம் வரை மக்கள் வந்து கொண்டிருந்தனர். மக்கள் அனைவரும் வந்தடைவதற்கு ஏதுவாக தாமதமாக வருமாறு என்னிடம் கூறப்படும். ஆனால் இம்முறை சிறப்பான ஏற்பாடு இருப்பதாகத் தெரிகிறது. எனவே இனிவரும் காலங்களில் நீங்கள் ஒத்துழைப்பு நல்கினால் இந்த நல்ல ஏற்பாடு தொடர்வதற்கு ஏதுவாக இருக்கும். இல்லையென்றால் கஷ்டம் ஏற்படும். நான் ஏற்கனவே கூறியதுபோன்று குறித்த நேரத்திற்கு முன்பாகவே பயணத்தைத் தொடங்குங்கள். அதன் மூலம் உங்களால் குறித்த நேரத்திற்கு முன்பாக இங்கு வந்து சேர முடியும். அதன் மூலம் குறித்த நேரத்தில் பார்கிங்கிற்கான இடத்தில் பார்கிங் செய்து பேருந்துகளின் மூலம் அழைத்து வர ஏற்பாடு செய்ய முடியும்.

அதேபோன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான சிக்கல்கள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகின்றன. எனவே பாதுகாப்பிற்காக செக்கிங் செய்யும்போதும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குங்கள். எங்கு தனது அடையாள அட்டை அல்லது அடையாள கடிதம் காட்டுவதற்கான தேவை இருக்குமோ அங்கு கண்டிப்பாக காட்டுங்கள். எத்தனை முறை அடையாள அட்டையைப் பரிசோதிக்க கேட்கப்பட்டாலும் காட்டப்பட வேண்டும். தனது கார்டையும் அல்லது குறிப்பிட்ட இடங்களுக்கான Pass –களை வேறெவருக்கும் கொடுக்காதீர்கள். சிலமுறை Green Area –விற்கான கார்டுகளை வேறு சிலருக்கு கொடுத்து விடுகின்றனர் அல்லது எந்தவொரு இடத்திற்கும் செல்வதற்குரிய Pass உங்களுக்குக் கிடைத்துள்ளதென்றால் அதனை பிறருக்கு கொடுக்காதீர்கள். கடந்த ஆண்டுகளில் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட Green Area கார்டுகளையோ அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான Pass –களையோ அவர் தனது நண்பருக்கு கொடுத்த சம்பவம் நடந்துள்ளது. சில நேரத்தில் தன்னார்வத் தொண்டர்களும், பொறுப்பாளர்களும் கூட இந்த தவறான செயலைச் செய்து விடுகின்றனர். எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பரிசோதிப்பவரும் கூட ஒருவருக்கு Aims Card மட்டுமின்றி இரண்டு கார்டுகள் வழங்கப்பட்டிருந்தால் இரண்டையும் பரிசோதித்துப் பாருங்கள். ஒரே பெயரில் இரண்டு அட்டைகள் இருக்கின்றதா என பாருங்கள்.

அதேபோன்று எவர்கள் தம்முடன் தண்ணீர் பாட்டில்களைக் கொண்டு வருவார்களோ அவர்களை பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்கள் தடுத்து நிறுத்துங்கள். அந்த பரிசோதனைக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள். ஏனெனில் அரசாங்க துறையில் இருந்து நமக்கு இதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உங்களின் பாதுகாப்பு ஏற்பாட்டிற்காகவே செய்யப்படுகிறது. எனவே அனைவரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். பாதுகாப்பிற்காக செக்கிங் செய்யக் கூடிய தொண்டர்களின் பணி என்னவென்றால் அவர் ஒருவரை அறிந்திருந்தாலும் அறியா விட்டாலும் ஜமாஅத் ஊழியர்களாக இருந்தாலும் இல்லா விட்டாலும் பொறுப்பாளராக இருந்தாலும் இல்லா விட்டாலும் சரி அனைவரையும் செக்கிங் செய்யுங்கள். எனவே எவரும் இதனை தவறாக நினைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. செக்கிங் செய்பவர்களும் வெட்கப்பட வேண்டிய எந்த அவசியமுமில்லை. அதேபோன்று ஒவ்வொரு நபரும் தனது வலமும் இடமும் தனது சூழலைக் கண்காணிக்க வேண்டும். இது மிக அவசியம் ஆகும். நான் ஏற்கனவே கூறியதுபோன்று இந்நாட்களில் மிக அதிகமாக துஆவில் அழுத்தம் கொடுக்க வேண்டும். அல்லாஹ் எல்லா வகையிலும் மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக.

மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். இங்குமங்கும் சுற்றித் திரியாதீர்கள். மாநாட்டு அமைப்பாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கு இங்கு ஒரு விஷயத்தைக் கூற விரும்புகின்றேன். இதற்கு முன்பும் பலமுறை கூறியுள்ளேன். மாநாட்டு அமைப்பாளர்கள் மக்களின் வசதிக்காக அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். சிலமுறை சிலர் வீட்டிலிருந்து கிளம்பும்போது எதுவும் சாப்பிடாமல் விரைவாக கிளம்பி வந்து விடுகின்றனர். சிலருக்கு காலையிலேயே உண்பதற்கான பழக்கம் இருக்காது. அதனால் இங்கு வந்த பிறகு அவர்களுக்கு பசி மயக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதனால் அவர்களின் உடல்நலமும் சிலமுறை பாதிக்கின்றது. அல்லது நீண்ட நேரம் பசியைத் தாங்கிக் கொள்ள முடியாத நோயாளிகளும் இருப்பர். அப்படி எவரும் இருந்தால் உணவு கூடாரத்தில் அவருக்கு உணவு வழங்க ஏற்பாடு இருக்க வேண்டும். அதற்கு டியூட்டியில் தொண்டர்கள் இருக்க வேண்டும். அதுபோன்ற நிலை ஒரு விருந்தினருக்கு வந்தால் உணவு உண்டு விட்டு உணவு கூடாரத்தை விட்டு விரைவாக வெளியேறி வர வேண்டும். அதன் மூலம் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும்.

அதேபோன்று கடை வீதிகள் முழுமையாக அடைக்கப்பட்டிருப்பதை மாநாட்டு அமைப்பாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்டால் அல்லது கடையில் அதன் உரிமையாளர் கூட அந்நேரத்தில் இருத்தல் கூடாது. எல்லாரும் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு இருக்க வேண்டும். கடை வீதிக்காக அமைக்கப்பட்டுள்ள துறைதான் அதற்கான பாதுகாப்புப் பொறுப்பை ஏற்க வேண்டும். பாதுகாப்பிற்காக அங்கு குத்தாமை நியமியுங்கள். விலை உயர்ந்த பொருட்கள் உள்ளன என்று கூறி அவருக்கு திருப்தி இல்லாமல் போனால் கடையில் அமர அனுமதி கிடையாது. கடைவீதியின் ஓரத்தில் எங்கு மாநாட்டு நிகழ்ச்சிகளை கேட்பதற்கான ஏற்பாடு உள்ளதோ அங்கு சென்று கேட்க வேண்டும். அதேபோன்று ஜமாஅத் அளவில் ஒவ்வொரு வருடத்தைப் போன்று இவ்வருடமும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. Review of Religion கண்காட்சியுடன் மஸீஹின் கஃபன் (சவப் போர்வை) கண்காட்சியும் நடக்கும். அந்நியர்கள் பலர் வருவர். வல்லுனர்கள் வருகை தந்து சொற்பொழிவு நிகழ்த்துவர். கேள்வி–பதில் நிகழ்ச்சிகள் இருக்கும். ஆர்வமுள்ளவர்கள் இதிலிருந்தும் பயன் பெற வேண்டும். அதேபோன்று இவ்வருடமும் அல் கலம் என்ற திட்டம் Review of Religion துறையின் கீழ் நடத்தப்படுகின்றது. அதில் திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு வசனம் அல்லது அதிகாரத்தைக் கைகளால் எழுதும்படி செய்யப்படுகின்றது. மக்கள் மிக ஆர்வத்துடன் அதில் கலந்து கொள்கின்றனர். ஆர்வமுள்ளவர்கள் நிச்சயம் அதில் பங்கு பெறலாம். இந்த வருடம் சில அருட்களுக்குரிய பொருட்களின் கண்காட்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுவும் பார்க்கக் கூடிய கண்காட்சியாகும். மஹ்ஸனே தஸாவீர் கண்காட்சி உள்ளது. அதுவும் பார்க்கக் கூடிய ஒன்றே. ஆயினும் மாநாடு நடக்கும் நேரத்தில் இது அடைக்கப்பட்டிருக்கும். மாநாட்டின் நிகழ்ச்சிகளை அனைவரும் கவனமாகக் கேளுங்கள். சொற்பொழிவுகளிலிருந்து பயன் பெறுங்கள். அல்லாஹ்வின் அருளால் ஆலிம்கள் மிக உழைப்புடன் தனது சொற்பொழிவை ஆயத்தம் செய்கின்றனர். அதிலிருந்து முழுமையாகப் பங்கு பெற வேண்டும். தனக்கு விருப்பமான சொற்பொழிவாளர்கள் அல்லது சொற்பொழிவு

–களை மட்டும் கேட்பது உகந்ததல்ல. எவரது சொற்பொழிவுகளிலிருந்தும் கவனமற்று இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அனைத்து சகோதரர்களும் கவனமாகக் கேளுங்கள். நான் எனது ஜமாஅத்திற்கும் எனது நஃப்ஸிற்கும் சொற்பொழிவில் இடம் பெறும் வாய் வாதங்களை மட்டும் விரும்புவதை ஏற்க மாட்டேன். மாநாட்டின் நோக்கங்கள் சொற்பொழிவு நிகழ்த்தியவர் எத்துணை சிறப்பான அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்துகிறார்! வார்த்தைகளில் எவ்வளவு அழுத்தம் இருக்கிறது!! என்ற விஷயத்தில் மாநாட்டின் நோக்கங்கள் அடங்கி விடக் கூடாது. அதனை நான் விரும்புவதில்லை.

ஆயினும், என்ன பணி செய்தாலும் அது செயற்கையாக அல்லாமல் அல்லாஹ்விற்கு உரியதாகவே இருக்க வேண்டும். இதுவே எனது இயல்பாகும். எதனை பேசினாலும் அல்லாஹ்விற்காக பேச வேண்டும். நாம் கூறுகின்ற அனைத்தும் இறைவனுக்காக இருக்க வேண்டும். அவனது திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும்; நாம் கேட்கின்ற விஷயங்களை இறைவனின் கூற்று என்ற கண்ணோட்டத்தில் கேட்க வேண்டும். மேலும் அதன்படி செயல்படுதற்காக கேட்க வேண்டும். அறிவுரைக்கான சபையில் இன்று நல்ல சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது என்று கூறுவதற்காக அறிவுரையை செவிமடுத்தல் கூடாது. கவனமாகக் கேட்க வேண்டும். அதன்படி செயலாற்றுவதற்காகக் கேட்க வேண்டும். சொற்பொழிவாளரின் சொற்பொழிவைப் பாராட்டும் எண்ணத்தில் கேட்கக் கூடாது.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களிடம் வீழ்ச்சியும், பின்னடைவும் ஏற்பட முக்கியக் காரணம் இதுவாகும். முஸ்லிம்கள் ஏன் வீழ்ச்சி அடைந்தனர்? ஏனெனில் அவர்கள் செயல்படும் நோக்கத்தில் அறிவுரைகளைக் கேட்பதில்லை. அவர்கள் மத்தியில் பெரிய பெரிய ஹால்களில் கூட்டம் நடக்கின்றது. சொற்பொழிவாளர்கள், அறிவுரையாளர்கள் தனது சொற்பொழிவை வாசிக்கின்றனர். சொற்பொழிவு நிகழ்த்துகின்றனர். சமுதாய நிலையின் மீது ஒப்பாரியும் வைக்கின்றனர். ஆனால் அதனால் எந்த தாக்கமும் ஏற்படுவதில்லை. அதற்கான காரணம்தான் என்ன? சமுதாயம் ஒவ்வொரு நாளும் முன்னேற்றம் அடைவதற்குப் பகரமாக வீழ்ச்சியை நோக்கி செல்கின்றது. இதனையே நாம் பார்த்து வருகின்றோம். இன்றைய நாட்களில் நிலைமை மிக மோசமாக ஆகிக் கொண்டே செல்கிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த சபைகளில் வருபவர்கள் கலப்பற்ற தன்மையில் வந்து கலந்து கொள்ளதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398-401; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே இந்த அடிப்படை விஷயத்தை மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொரு நபரும் புரிந்து கொள்ள வேண்டும். கலப்பற்ற தன்மையுடன் மாநாட்டில் கலந்து கொள்ளுங்கள். சொற்பொழிவுகளைக் கேளுங்கள். நாம் முடிந்த வரை அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் சொற்பொழிவுகளைக் கேளுங்கள். அஹ்மதி ஆலிம்கள் மீது அல்லாஹ்வின் மாபெரும் அருள் உள்ளது. அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகங்களிலிருந்து பயன் பெறுகின்றார்கள். அதிலிருந்து பயன் பெற்றவாறு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை நமக்கு எட்ட வைக்கின்றனர். ஆன்மீகமான மற்றும் அறிவுசார்ந்த கருத்துக்களை நமக்கு எடுத்துரைக்கின்றனர். உண்மையில் அதன்படி செயல்படுபவர்களாக நாம் இருந்தால் நாம் நமது வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மாநாட்டின் நோக்கங்களை முழுமை செய்யும் நல்வாய்ப்பினை அல்லாஹ் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்–றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்–களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

93600 05888
78716 00664

**IBR**
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

# ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுப்பது தொர்பாக ஷரீஅத் கூறுவது என்ன? மற்றும் பெண்களின் உரிமைகள்

❖ ❖ ❖ மன்சூர் அஹ்மது மஸ்ரூர் (ஆசிரியர், பத்ர் வார இதழ் - உருது பதிப்பு) ❖ ❖ ❖

ஏறக்குறைய ஒரு வருடமாக முத்தலாக் தொடர்பான விவகாரம் நாடு முழுவதும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கின்றது என்பதை வாசகர்கள் நன்றாக அறிவர். இது தொடர்பாக பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. தொலைக்காட்சியில் இது தொடர்பான வாக்குவாதங்களின் போர் ஆரம்பமாகி இருக்கின்றது. அதிகமாக மார்க்க அறிவு இல்லாத பலரது உள்ளங்களிலும் இப்படிப்பட்ட தருணத்தில் முத்தலாக் தொடர்பான சரியான இஸ்லாமிய கருத்து என்ன? திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் ஒளியில் ஒரே அமர்வில் கொடுக்கப்படுகின்ற மூன்று தலாக்குகளின் நிலை என்ன? என்ற கேள்வி எழுகிறது.

முத்தலாக் தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத் கூறுகின்ற கருத்தை எடுத்து வைப்பதற்கு முன்னதாக அதாவது இது தொடர்பாக திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் இஸ்லாம் கூறும் சரியான கருத்து என்ன என்பதை கூறுவதற்கு முன்னதாக இந்த விவகாரம் தொடர்பாக நாடு முழுவதும் எத்தகைய ஒரு சூழல் உருவாகி இருக்கின்றது என்பதை சுருக்கமாக எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

நாம் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், முத்தலாக் தொடர்பான பல விவகாரங்களும் உச்சநீதி மன்றத்தில் விசாரணையில் இருந்து வருகின்றன. ஜெய்ப்பூரைச் சார்ந்த ஆ.ஃப்ரீன் ரஹ்மான், ஜார்கண்டிலிலுள்ள அத்ஹம் நகர் மாவாட்டத்தில் உள்ள காஷிபூரைச் சார்ந்த சாயிரா பானு, உத்திர பிரதேசத்திலுள்ள ராம்பூரைச் சார்ந்த குல்ஷன் பர்வீன், பீகாரைச் சார்ந்த இஷ்ரத் ஜஹான், உத்திர பிரதேசத்திலுள்ள ஸஹாரன்பூரைச் சார்ந்த அதிய்யா சாபிரி ஆகியோர் முத்தலாக்கிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த விவகாரம் கடந்த வருடம் உத்திரகாண்டிலுள்ள காஷிபூரைச் சார்ந்த சாயிரா பானுவின் கணவர் அவருக்கு தலாக் கொடுத்த பிறகு சாயிரா பானு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததிலிருந்து ஆரம்பமானது. (முத்தலாக் மற்றும் ஹலாலா (அதாவது முத்தலாக் கொடுத்த பிறகு கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ விரும்பினால் இன்னொரு நபரை அந்த பெண் திருமணம் செய்து அவர் அவளுக்கு தலாக் கொடுத்த பிறகுதான் மீண்டும் இவர்கள் திருமணம் செய்து கொள்ள முடியும்.) ஆகியவற்றை எதிர்த்து தனது மனுவில் அவர் தமது கருத்துக்களைக் கூறியிருந்தார்.

ஜுன் 2016 -ல் R.S.S -ன் கிளை அமைப்பான "ராஷ்ட்ர்வாதி முஸ்லிம் மஹ்லா சங்க்" உச்சநீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தது. இந்த மனு Muslim Personla Law -வைச் சட்டத்தின் வட்டத்திற்குள் கொண்டு வருவதற்காகவே தாக்கல் செய்யப்பட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் மற்றும் முத்தலாக் போன்ற சடங்குகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதே அதன் நோக்கமாக இருந்தது.

உச்ச நீதிமன்றம் முத்தலாக்கை மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனை என்று தீர்மானித்தவாறு அதன் ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் நீதிமன்றம் ஆய்வு செய்யும் என்று கூறியது. மேலும், இந்த விவகாரம் உணர்வுப்பூர்வ -மானது என்பதை அறிந்து ஐந்து நீதிபதிகளைக் கொண்ட ஓர் அமர்விடம் அதை ஒப்படைத்தது. இந்த ஐந்து நீதிபதிகளும் ஐந்து வெவ்வேறு மதங்களுடன் தொடர்புள்ளவர்களாவர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு: (1) தலைமை நீதிபதி ஜெக்தேஸ் சிங் கேயர் - சீக்கிய மதம் (2) கோரீன் ஜோசப் - கிறித்தவ மதம் (3) ஆர்.எ.ஃப். ட்ரேமன் - பாரசீக மதம் (4) யூ.யூ. லலித் - இந்து மதம் (5) அப்துன்னஸீர் - இஸ்லாமிய மதம்

இப்போது ஆட்சி புரிந்து வருகின்ற அரசு முத்தலாக்கிற்கு எதிரானது என்பதையும் நாம் வாசகர்களுக்கு கூறிக் கொள்கின்றோம். மத்திய அரசின் சட்டத்துறை அமைச்சரான மாண்புமிகு ஸ்ரீ ரவிசங்கர் பிரசாத் அவர்கள் அரசாங்கம் முத்தலாக் தொடர்பாக பெரும் முடிவு ஒன்றை எடுக்கலாம் என்று கூறியிருந்தார். அரசு, மதத்தை மதிக்கின்றது. ஆனால், இறை வணக்கமும் சமுதாயத் தீமையும் ஒன்று மற்றொன்றுடன் இணைந்து செல்ல முடியாது என்றும் அவர் கூறி இருந்தார். உத்திர பிரதேசத்தில் தற்போது நடைபெற்ற தேர்தலின்போது பி.ஜே.பி முத்தலாக்கை முறையாக, தான் தேர்வு செய்துள்ள ஒரு விவகாரமாக அறிவித்ததுடன் மட்டும் அல்லாமல், காங்கிரஸ், சமாஜ்வாதி பார்ட்டி ஆகிய இரண்டு கட்சிகளும் முத்தலாக் தொடர்பான தமது கருத்துகளைத் தெளிவாக தெரிவிக்க வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தது.

முத்தலாக்கிற்கு எதிரான கருத்தையுடைய மத்திய அரசு அதன் தரப்பிலிருந்து உச்ச நீதிமன்றத்தில் நான்கு கேள்விகளை வைத்தது.

(1) முதல் கேள்வி இதுவாகும்: மார்க்க சுதந்திரத்திற்கான உரிமையின் கீழ் முத்தலாக், ஹலாலா மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்வதற்கான அனுமதியைச் சட்டப்படி வழங்க முடியுமா? வழங்க முடியாதா?

(2) இரண்டாவது கேள்வி இதுவாகும்: சமத்துவ உரிமை, கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை, மார்க்கச் சுதந்திரம் தொடர்பான உரிமை ஆகியவற்றில் எதற்கு முதலிடமும் முன்னுரிமையும் வழங்கப்படும்?

(3) மூன்றாவது கேள்வி இதுவாகும்: Personal Law அரசியல் சட்டத்தின் 13 -வது பிரிவின் கீழ் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுமா? அல்லது அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாதா?

(4) நான்காவது கேள்வி இதுவாகும்: முத்தலாக், நிக்காஹ், ஹலாலா, ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் ஆகியவை இந்தியாவும் கையெழுத்திட்டுள்ள சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் சரியானவையா?

உச்சநீதிமன்றம் முத்தலாக், பலதாரமணம், ஹலாலா ஆகியவை தொடர்பாக இந்திய அரசிடம் அவற்றைப் பற்றிய தனது கருத்துகளையும் பரிந்துரைகளையும் தருமாறு கேட்டது. அரசு உச்சநீதிமன்றத்தின் முன்னால் முத்தலாக் முஸ்லிம் பெண்களின் மனோநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக முஸ்லிம் பெண்களுக்கு சட்டரீதியாக கிடைத்துள்ள அடிப்படை உரிமைகளுக்கும் எதிராக செயல்படும் நிலை இருந்து வருகின்றது என்று அரசாங்கம் கூறியது. மேலும் முத்தலாக் சடங்கு ரீதியிலான ஒரு செயல் என்று கூறியவாறு இதன் காரணமாக பெண்களுக்கு அவர்களது வட்டத்திலுள்ள ஆண்கள் மற்றும் மற்றவர்களது வட்டத்திலுள்ள பெண்களுக்கு எதிரில் மிகவும் அதிகமாக இகழ்ச்சியையும் வீழ்ச்சியையும் எதிர்கொள்ள வேண்டியது வருகின்றது என்றும் அது கூறியது. நாட்டின் மொத்த ஜனத்தொகையில் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை 8 சதவிகிதம்தான் இருக்கின்றது என்றாலும் முத்தலாக்கினால் ஏற்பட்ட அச்சத்தால் இவ்வளவு பெரிய ஜனத்தொகையும் கூட சுயமே பாதுகாப்பற்ற சூழலில் இருந்து வருவதாகவே உணர்கின்றது என்றும் அது கூறியது.

7 அக்டோபர் 2016 -ல் Law Comission of India -ன் தலைவரான இந்திய உச்சநீதிமன்றத்தின்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

முன்னால் நீதிபதியான Doctor Justice B.S Chowhan அவர்கள் தரப்பிலிருந்து 16 கேள்விகள் அடங்கிய ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. அதன்படி முத்தலாக், ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம், தலாக் கொடுக்கப்பட்ட பெண்களுக்கு உணவு மற்றும் ஜீவனாம்சம் வழங்குவது, வாரிசுரிமை ஆகியவை தொடர்பாக கேள்விகள் கேட்கப்பட்டு அதில் பொதுமக்களிடம் இது தொடர்பாக தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கூறப்பட்டிருந்தது. 45 நாட்களுக்குள் இந்த கேள்விகளுக்கான பதில்களைத் தருமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

Law Commision தான் அனுப்பிய கேள்விகளின் ஆரம்பத்தில் Article 44 -ஐக் குறிப்பிட்டுக் கூறி சட்டத்தின் இந்தப் பிரிவின் கீழ் நாட்டிலுள்ள குடிமக்கள் அனைவருக்கும் சமமாக இருக்கின்ற Civil Code -ஐப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது. அதற்கு ஏற்ப அரசாங்கமும் Law Comission இடம் இது பற்றி சிந்திக்கும் படியும் ஆய்வு செய்யும் படியும் கூறி இருக்கின்றது. அரசு இந்த கேள்விகள் காரணமாக ஒரு விதமான Civil Code தொடர்பாக ஆரோக்கியமான ஒரு விவாதத்தைச் செய்ய விரும்புகின்றது என்று Law Comission கூறியுள்ளது. கேள்விகள் பற்றி இதைக் கூற வேண்டியது அவசியமானதாகும். ஒவ்வொரு கேள்விக்கும் பதில் கூறுவதற்கு இரண்டு அல்லது மூன்று Option -கள் தரப்பட்டிருக் -கின்றன. பெரும்பாலான கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என்று பதில் கூறுமாறு கூறப்பட்டிருக்கின்றது. சில கேள்விகளுக்கு விளக்கமாக பதில் கூறுவதற்கு இரண்டு வரிகளுக்கான இடம் விடப்பட்டிருக்கின்றது. உதாரணமாக கேள்வி எண் 4 -ல் Will uniform Civil Code or Codification of Personal Law and Customary Practices ensure gender equaltiy? (a) Yes (b) No அதாவது ஒரே விதமான Civil Code -ஐப் பயன்படுத்துவது அல்லது Personal Law -வின் விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் வரையறுப்பதன் மூலமாக அல்லது மத சடங்கு சம்பிரதாயங்கள் மூலம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையில் சமத்துவத்தை உருவாக்கி விட முடியுமா? இதற்கு ஆம் அல்லது இல்லை என்று பதில் கூற வேண்டும்.

5 -வது கேள்வி. Should the uniform Civil Code be optional? அதாவது ஒரே விதமான Civil Code ஆக அதாவது விருப்பத்திற்கு ஏற்ப தேர்வு செய்யக் கூடியதாக இருக்க வேண்டுமா? அரசு 7 குடும்ப விவகாரங்களில் Uniform Civil Code -ஐக் கொண்டு வர விரும்புகின்றது. அவை பின்வருமாறு: (1) திருமணம் (2) விவாகரத்து (3) தத்தெடுக்கின்ற முறை (4) குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பது (5) பெண்களின் உணவு மற்றும் செலவிற்கான ஏற்பாட்டைச் செய்வது (6) வாரிசுரிமை (7) மரணித்தவர்கள் விட்டுச் சென்றவை ஆகும்.

Law Comission of India -வின் கேள்விகள் வெளியிடப்பட்ட பிறகு அரசியல் சுற்றுச் சூழல் மிகவும் சூடு பிடிக்க ஆரம்பித்தது. பல கருத்துக்கள் கூறப்பட்டன. Muslim Personal Law Board இக்கேள்விகள் அடங்கிய கடிதத்தை Boycott (பகிஷ்காரம்) செய்வதாக அறிவித்தது. இவற்றிற்குப் பதில் தரப்பட மாட்டாது என்றும் கூறியது. இவை ஒருதலைப்பட்சமான கேள்விகள் ஆகும். இதன் மூலமாக அரசு எங்கள் மீது ஒரே விதமான Civil Code -ஐத் திணிக்க விரும்புகின்றது என்று அது கூறியது.

Muslim Personall Law Board முத்தலாக்கிற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தவர்களில் ஒரு பிரிவாகும். அது உச்ச நீதிமன்றத்தின் தரப்பிலிருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கூறும்போது தனது நிலைமையை தெளிவுபடுத்தியவாறு ஷரீஅத்தின் சட்டங்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவற்றில் மாற்றம் செய்வது சாத்தியமற்றதாகும். அதன் சட்ட ரீதியான நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் முடிவு செய்ய முடியாது என்று தெளிவாக கூறி இருக்கின்றது. மதம் மற்றும் சமூகத்தின் சீர்த்திருத்தங்களின் பெயரில் Muslim Personal Law -வில் எவ்வகையிலும் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது. எனவே, உச்சநீதிமன்றம் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று போர்டு கூறியிருக்கின்றது. திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் ஒளியில் முத்தலாக் அனுமதிக்கப்பட்டதாகும். எனினும் ஹலாலாவின் தற்போதைய வடிவமானது இஸ்லாத்திற்கு மாற்றமானதும் ஷரீஅத்திற்கு மாற்றமானதும் ஆகும் என்று போர்டு கூறியது. மேலும் முத்தலாக் தொடர்பாக மற்ற நாடுகளில் நடைமுறையில் இருந்து வரும் சட்டங்களை அளவுகோலாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அது கூறி இருக்கின்றது.

இதையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். அதாவது All India Muslim Womens Personal Law Board (AIMWPLB) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சத்திய பிரமாணம் மற்றும் முத்தலாக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்ட Muslim Personal Law Board -ன் மனு ஆகியவை ஆண்களில் ஆதிக்கத்திற்கு துணை போகின்ற Muslim Personal Law Board -ன் இந்த செயல் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையாகும் என்றும் கூறியிருக்கின்றது.

Muslim Personal Law -வைப் பாதுகாக்கும் வகையில் All India Muslim Personal Law Board -ன் பல கூட்டங்கள் நடந்தன. இந்தியாவின் பெரும் பெரும் நகரங்களில் Muslim Personal Law -விற்கு சாதகமாக எண்ணற்ற பெரும் பெரும் கூட்டங்களை அது நடத்தியது. அதில் முஸ்லிம் ஆலிம்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்ற பெயரில் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கூட்டங்கள் நடந்தன. அதில் மக்களிடம் அவர்கள் அதிகமதிகமாக மார்க்க விஷயங்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. முஸ்லிம் ஆண்கள் தங்களது மனைவிக்கு ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுக்க வேண்டாம். அதனால் மற்றவர்களுக்கு இது பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் இருக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. போர்டு தரப்பிலிருந்து ஒரே அமர்வில் மூன்று தலாக் கூறுபவர்களை Boycott (பகிஸ்காரம்) செய்ய வேண்டும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்ற பெயரில் பெண்களுக்கு பல இடங்களில் கூட்டங்களை நடத்தினர்.

All India Muslim Personal Law Board தரப்பிலிருந்து Personal Law -விற்குச் சாதகமாக கையெழுத்து வாங்குகின்ற நிகழ்ச்சியும் நடந்தது. அதன் ஏற்பாட்டின்கீழ் 5 கோடி மக்கள் கையெழுத்திட்டனர். அதில் இரண்டு கோடியே 75 இலட்சம் பெண்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் முஸ்லிம்கள் Muslim Personal Law -வில் எவ்வகையிலான மாற்றத்தையும் செய்ய விரும்பவில்லை என்பதை அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தனர். இந்திய ஜம்யிய்யத்துல் உலமா பேரவை அதன் பொதுச் செயலாளர் ஆன மவ்லானா மஹ்மூது மதனீ அவர்களின் தலைமையில் Jamhiyathe Law Institute -ஐ நிறுவியது. அதன் மூலம் முத்தலாக் போன்ற பிரச்சனைகளை முன் வைத்து முஸ்லிம்களை எந்த வகையில் குறி வைக்கின்றனரோ அதை விட சிறந்த முறையில் அந்த பிரச்சனையை அணுகி அதை சரி செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருந்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மு∴ப்திகளும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர். முன்னாள் தலைமை நீதிபதியான A.M. அஹ்மதி அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முத்தலாக் தொடர்பாக பேசும்போது எல்லாரும் ஒன்று சேர்ந்து இது பற்றி சிந்திப்பதற்காக அமர வேண்டும். ஒற்றுமையாக இருந்து இது பற்றி முடிவு செய்ய வேண்டும். மேலும் இதற்கான ஏதாவது ஒரு தீர்வைக் காண வேண்டும் என்று கூறினார்கள். நீதிபதி A.M. அஹ்மதி அவர்களின் இந்தக் கூற்று சிந்திக்கத்தக்கதாகும்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

11 மே 2017 -ல் உச்ச நீதிமன்றம் மீண்டும் ஒரு முறை விசாரணையை ஆரம்பித்தது. ஐந்து நீதிபதிகளைக் கொண்ட இந்த பெஞ்ச் முத்தலாக் தொடர்பான விஷயங்கள் மட்டுமே விசாரிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்டவர்களை திருமணம் செய்வது தொடர்பாக விசாரணை இருக்காது. எனினும், தேவை ஏற்பட்டால் ஹலாலா தொடர்பாகவும் விசாரணை நடைபெறும் என்று தெளிவாகக் கூறியது. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே முத்தலாக் மார்க்கத்தின் ஒரு பகுதியாகும் என்று எங்களுக்கு தோன்றினால் நாங்கள் அதில் தலையிட மாட்டோம் என்று பெஞ்ச் கூறியது. மே 11 ஆம் தேதி நடைபெற்ற விசாரணையில் தலைமை நீதிபதி அவர்கள் இது போன்ற சில கேள்விகளைக் கேட்டார்கள். அதாவது முத்தலாக் இஸ்லாத்தை விட்டு பிரிக்க முடியாத அதன் பகுதியாக இருக்கின்றதா? நீதிமன்றம் இந்த விவகாரத்தில் தலையிட முடியுமா? முத்தலாக்கை புனிதமானது என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இதன் காரணமாக அடிப்படை உரிமைகளுக்கு எதிராக செயல்படுகின்றோமா? என்று அவர்கள் கேட்டார்கள். மே 12 ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது J.S கேய்ர் அவர்களின் தலைமையின் கீழுள்ள ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பெஞ்ச் விசாரணையின்போது தனது கருத்தைத் தெரிவித்தவாறு முத்தலாக் திருமணத்தை முறிக்கின்ற மிகவும் மோசமான வெறுக்கத்தக்க வழிமுறையாகும் என்று கூறியது. தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் மத்திய அரசின் தரப்பிலிருந்து ஆதாரத்தை எடுத்துக் கூறியவாறு அட்டர்னி ஜெனரல் மெகல் ரோஹ்த்கீ அவர்கள் சவூதி அரேபியா, ஈரான், ஈராக் உட்பட 25 நாடுகளில் முத்தலாக்கை முடிவுக்குக் கொண்டு வர முடிகின்றது என்றால் இந்தியாவில் அவ்வாறு ஏன் நடக்க முடியாது? என்று கேட்டார்.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பெஞ்ச் முழுமையாக விசாரணையை நடத்தி முடித்த பிறகு தனது தீர்ப்பைப் பாதுகாத்து வைத்திருக்கின்றது. Personal Law Board -ன் பொதுச் செயலாளரான மவ்லானா வலி ரஹ்மானி அவர்கள் நீதிமன்றம் என்ன தீர்ப்பைக் கூறினாலும் அந்த நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று கூறியுள்ளார். நாட்டில் ஏறக்குறைய ஓர் ஆண்டு காலமாக நடைபெற்று வருகின்ற முத்தலாக் தொடர்பான நிகழ்வுகளையும் அதன் பின்னணியையும் மிகவும் சுருக்கமாக குறிப்பிட்ட பிறகு இனி வரும் இதழ்களில் இன்ஷா அல்லாஹ் நமது அசல் குறிக்கோள் தொடர்பாக நாம் விளக்க இருக்கின்றோம். அதாவது ஒரே அமர்வில் மூன்று முறை தலாக் கூறுவது தொடர்பாக ஷரீஅத் (மார்க்கச் சட்டம்) என்ன கூறுகிறது? என்பதை விளக்குகின்றோம்.

இது விஷயமாக மத்திய அரசும் Personal Law Board -ம் எந்தக் கருத்தில் இருந்தன என்பது பற்றியும் சுருக்கமாக நாம் எடுத்துக் கூறி இருந்தோம். இஸ்லாத்தின் பார்வையில் முத்தலாக் சரியானதா? இல்லையா? மேலும் எவராவது ஒரே அமர்வில் தனது மனைவிக்கு மூன்று தலாக் கொடுத்தால் அவர் மீது என்ன கட்டளை நடைமுறைப்படுத்தப்படும்? மேலும் தலாக் தொடர்பான இஸ்லாத்தின் வழிமுறை என்ன? என்ற அசல் விஷயம் பற்றி இப்போது நாம் விளக்க இருக்கின்றோம்.

நமது அன்பான எஜமானர் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் என்றும் முழுமையான மகத்தான ஷரீஅத் இறங்கியது. அவர்கள்தான் திருக்குர்ஆனின் போதனைகளை எல்லாரையும் விட அதிகமாகவும் எல்லாரையும் விட சிறந்த முறையிலும் புரிபவர்களாக இருந்தார்கள். அவர்களின் போதனைகளுக்கேற்ப ஒரே அமர்வில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகளுக்கு இஸ்லாத்தின் ஷரீஅத்தின் அடிப்படையில் எந்தத் தகுதியும் இல்லை. அஹ்மதிய்யா ஜமாஅத் ஷரீஅத்தில் இல்லாத அத்தகைய செயலை வெறுக்கத்தக்க பார்வையுடன் பார்க்கின்றது. அதற்காக தனது வேதனையையும் வெளிப்படுத்து -கின்றது.

தலாக் தொடர்பான இந்த ஒரு விவகாரத்தில் மட்டும் அல்லாமல் பெரும்பாலான முஸ்லிம்கள் இன்று பல்வேறு வகையிலுள்ள ஷிர்க்கிலும் பித்அத்துகளிலும் வழிகேட்டிலும் மூழ்கி விட்டனர். அவற்றிற்கு ஷரீஅத்துடன் சிறிதளவு கூட தொடர்பு இல்லை. அத்தகைய தருணத்தில் குறிப்பாக முஸ்லிம்களையும் பொதுவாக முழு மனித இனத்தையும் இருள்களிலிருந்து வெளியில் கொண்டு வருவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அஅவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப எந்த சீர்திருத்தவாதியின் வருகை நிகழ வேண்டியது இருந்ததோ, எந்த வாக்களிக்கப்பட்ட இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் வர வேண்டியது இருந்ததோ, எந்த கல்கி அவதாரம் வர வேண்டியது இருந்ததோ அவர்கள் தோன்றி விட்டார்கள். மார்க்கங்கள் முன்னறிவித்த அந்த மகானின் வருகை நிகழ்ந்து விட்டது. அவர்கள்தான் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆவார்கள். அவர்கள் 1889 -ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடித்தளத்தை நிறுவினார்கள். நல்லவர்களையும் தூயவர்களையும் கொண்ட ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அம்மக்கள் முற்றிலுமாக இஸ்லாத்தின் போதனைகளின் சரியான உண்மையான முன்மாதிரிகளாகத் திகழ்ந்தனர். எனவே இன்று இஸ்லாத்தின் உண்மையான முகத்தை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வடிவில்தான் பார்க்க முடியும். இன்று உலகின் அமைதியும் நிம்மதியும் இந்த சீர்திருத்தவாதியுடனும் அவர் உருவாக்கிய ஜமாஅத்துடனும் தொடர்பு கொண்டதன் மூலமாகவே ஏற்படும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்களே! இப்போது இந்த தோட்டத்தில்தான் உங்களுக்கு சுகமும் நிம்மதியும் இருக்கின்றது. முட்கள் நிறைந்த காடுகளில் திரிபவர்களே! விரைவாக இந்த தோட்டத்தில் வருவதற்கான நேரம் இதுவேயாகும்.

ஒரே அமர்வில் அதாவது ஒருமுறை மூன்று தலாக் கூறி திருமண உறவை முறித்துக் கொள்வதற்கான அனுமதியை ஷரீஅத் ஒருபோதும் வழங்கவில்லை. அஹ்லே ஹதீஸ் (நபிமொழி-களைச் சார்ந்திருக்கும் பிரிவினர்) ஒரே அமர்வில் கொடுக்கப்படுகின்ற மூன்று தலாக்குகளை மூன்று தலாக்குகளாக ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, அவற்றை ஒரு தலாக் ஆகவே அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ஹன.ஃபிகள் அதை முத்தலாக் ஆகவே ஏற்றுக் கொள்கின்றனர். இந்த முத்தலாக்கின் மூலம் தம்பதியரிடையே நிரந்தரமான பிரிவு ஏற்பட்டு விட்டது என்று அவர்கள் மார்க்கத் தீர்ப்பு வழங்கி விடுகின்றனர். ஆனால், எல்லா ஹன.ஃபிகளும் ஒரே அமர்வில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகள் தலாக்கே பித்அத் (மார்க்கத்தின் புதிதாக புகுத்தப்பட்டுள்ள தலாக்) ஆகும். இவ்வாறு தலாக் கொடுப்பவர்கள் பாவிகள் ஆவர் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். எல்லா ஹன.ஃபிகளும் இதில் ஒருமித்த கருத்தையுடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவ்வாறிருந்தும் கூட இவ்வாறு மூன்று தலாக்குகள் நிறைவேறி விடுகின்றன. அதன் மூலம் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிரந்தர பிரிவு ஏற்பட்டு விடுகின்றது என்று ஏற்றுக் கொள்கின்றனர். ஏறக்குறைய எல்லா மத்ரஸாக்களிலும் கற்றுக் கொடுக்கப்படுகின்ற ஹன.ஃபிகளின் மிகவும் புகழ்பெற்ற நூலான 'கதூரி' -யில் தலாக் தொடர்பாக 'கிதாபுத் தலாக்' -ல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது.

اَلطَّلَاقُ عَلٰى ثَلٰثَةِ اَوْجُهٍ اَحْسَنُ الطَّلَاقِ وَطَلَاقُ السُّنَّةِ وَطَلَاقُ الْبِدْعَةِ -اَحْسَنُ الطَّلَاقِ اَنْ يُّطَلِّقَ الرَّجُلُ اِمْرَاَتَهٗ تَطْلِيْقَةً وَاحِدَةً فِيْ طُهْرٍ وَاحِدٍ لَمْ يُجَامِعْهَا فِيْهِ وَيَتْرُكَهَا حَتّٰى تَنْقَضِيَ عِدَّتُهَا-وَطَلَاقُ السُّنَّةِ اَنْ تُطَلَّقَ الْمَدْخُوْلُ بِهَا فِيْ ثَلٰثَةِ اَطْهَارٍ - وَطَلَاقُ الْبِدْعَةِ اَنْ يُّطَلِّقَهَا ثَلٰثًا بِكَلِمَةٍ وَاحِدَةٍ اَوْ ثَلٰثًا فِيْ طُهْرٍ وَاحِدٍفَاِذَا فَعَلَ ذٰلِكَ وَقَعَ الطَّلَاقُ وَبَانَتْ اِمْرَاَتُهٗ مِنْهُ وَكَانَ عَاصِيًا-

அதாவது தலாக் மூன்று வகைப்படும்.
(1) தலாக்கே அஹ்ஸன்
(2) தலாக்கே சுன்னத்
(3) தலாக்கே பித்அத்.

தலாக்கே அஹ்ஸன் என்பது ஆண் தனது மனைவி (மாதவிடா-யிலிருந்து) தூய்மை

---

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

---

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

---

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

அடைந்திருக்கும் நிலையில் ஒரு முறை மட்டும் தலாக் கொடுப்பதாகும். அதாவது அவரது மனைவியுடன் அவர் உடலுறவு கொள்ளாத நிலையில் உள்ள அத்தகைய (மாதவிடாயில் இருந்து) தூய்மையடைந்திருக்கும் நிலையாக அது இருக்க வேண்டும். பிறகு எந்த தலாக்கும் கொடுக்கக் கூடாது. எதுவரையென்றால், அவள் ‘இத்தா’ இருக்கின்ற காலம் கழிய வேண்டும். ‘தலாக்கே சுன்னத்’ என்பது ஒருவரது மனைவி (மாதவிடாயிலிருந்து) தூய்மையடைகின்ற மூன்று வெவ்வேறு காலக்கட்டங்களில் அவருக்கு மூன்று முறை தலாக் கொடுப்பதாகும். ‘தலாக்கே பித்அத்’ என்பது ஒரே சமயத்தில் கொடுக்கப்படுகின்ற மூன்று தலாக்குகளாகும். இந்நிலையில் தலாக் (விவாகரத்து) நிகழ்ந்து விடும். மேலும் இந்த தலாக், ‘தலாக்கே முக்லஸா’ அல்லது ‘தலாக்கே பத்தா’ என்றழைக்கப்படும். இந்த தலாக்கை கொடுக்கின்ற கணவர் பாவியாக இருப்பார். ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகள் தலாக்கே அஹ்ஸனும் ஆகாது. தலாக்கே சுன்னத்தும் ஆகாது. மாறாக, அது தலாக்கே பித்அத்தாகும். அதாவது மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்பட்ட தலாக் ஆகும். பித்அத்திற்கு ஷரீஅத்துடன் எவ்விதத் தொடர்பும் இல்லை. பித்அத் வழிகேடாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

فَاِنَّ خَيْرَ الْحَدِيْثِ كِتَابُ اللهِ وَخَيْرَ الْهَدْيِ هَدْىُ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَشَرَّ الْاُمُوْرِ مُحْدَثَاتُهَا وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “சிறந்த கூற்று அல்லாஹ்வின் வேதமாகும். சிறந்த வழிமுறை முஹம்மது (ஸல்) அவர்களின் வழிமுறையாகும். மிகவும் மோசமான செயல் மார்க்கத்தில் பித்அத்துகளை (புதிய விஷயங்களை) உருவாக்குவதாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேட்டின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதாகும்.” (முஸ்லிம் கிதாபுல் ஜுமுஅதி பாபு தஹ்ஃபீஃபிஸ்ஸலாத்தி வல் குத்பதி)

ஹனஃபிகள், நபித்தோழர் ருகானா (ரலி) அவர்களுடன் தொடர்புடைய ஒரு நபிமொழி பற்றி நன்றாக அறிந்தவர்களாவர். அதில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரே அமர்வில் அவர்கள் கொடுத்த மூன்று தலாக்குகள் தொடர்பாக இது உண்மையில் ஒரு தலாக்கே ஆகும். நீங்கள் திரும்பி விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால், இவ்வாறிருந்தும் கூட ஹனஃபிகள் இந்த நபிமொழியிலிருந்து ஆதாரத்தைப் பெறாமல் இருப்பது வியப்பிற்குரியதாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை வருங்காலத்தில் எவராவது ஒரே அமர்வில் மூன்று தலாக்குகள் கொடுத்தால் நாம் அதனை மூன்று முறை கொடுக்கப்பட்ட தலாக்காகவே ஏற்றுக் கொள்வோம் என்று கூறினார்கள். ஹனஃபிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த தீர்ப்பை தமது கருத்திற்கு ஆதரவாக எடுத்துக் கூறுகின்றனர். இது பற்றிய முழுமையான விபரம் என்னவென்றால், திருக்குர்ஆனுக்கும் நபிமொழிக்கும் முற்றிலும் மாற்றமாக இருக்கின்ற ஒரே சபையில் வைத்து மூன்று முறை தலாக் கொடுக்கின்ற இந்த செயல் அதிகமானபோது ஸய்யிதுனா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நபித்தோழர்களுடன் ஆலோசனை செய்த பிறகு வருங்காலத்தில் ஒரே சபையில் கொடுக்கப்படுகின்ற மூன்று தலாக்குகள் மூன்று முறை கொடுக்கப்பட்ட தலாக்காகவே கருதப்படும். பிறகு அத்தகைய நபருக்கு தமது மனைவியிடம் திரும்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. அத்தகைய தலாக் தலாக்கே பத்தாவாக (அதாவது தம்பதியருக்கு இடையில் நிரந்தரமான பிரிவை ஏற்படுத்தக்கூடிய தலாக்காக)க் கருதப்படும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் ஷரீஅத்தை கேலிக்குரியதாக ஆக்கி விடக் கூடாது என்பதற்காக தண்டனையின் வடிவில் இந்த தீர்ப்பை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முழு கிலாஃபத் காலக்கட்டத்திலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத்தின் ஆரம்ப நாட்களில் முதல் இரண்டு வருடங்கள் வரையிலும் ஒரு நபர் ஒரே சபையில் வைத்து தனது மனைவிக்கு மூன்று முறை தலாக் கொடுத்தால் அதனை ஒரே தலாக் ஆகக் கருதியவாறு அவர் தனது மனைவியிடம் திரும்புவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், நாம் ஏற்கனவே கூறியிருந்தது போன்றே ஒரே சபையில் மூன்று முறை தலாக் கூறுவது திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் கட்டளைக்கு முற்றிலும் எதிரானதும் ஷரீஅத்துடன் விளையாடுவதும் ஆகும். ஸய்யிதுனா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதனை தடுத்து நிறுத்துவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள். அதாவது ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகள் வருங்காலத்தில் மூன்று தலாக் என்றே ஏற்றுக் கொள்ளப்படும். அதன் மூலம் கணவன் மனைவிக்கிடையில் நிரந்தரமான பிரிவு ஏற்பட்டு விடும். அத்தகைய நபர் பிறகு எவ்வளவுதான் வருத்தப்பட்டாலும் அவர் திரும்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. அதன் மூலம் மக்கள் பாடம் படிக்க வேண்டும். ஷரீஅத்துடன் விளையாடுவதை நிறுத்த வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரும்பினார்கள்.

சஹீஹ் முஸ்லிமில் கிதாபுத் தலாக்கில் இந்த அறிவிப்பு வருகின்றது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِىَ اللهُ عَنْهُ قَالَ كَانَ الطَّلَاقُ عَلٰى عَهْدِ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاَبِىْ بَكْرٍ وَسَنَتَيْنِ مِنْ خِلَافَةِ عُمَرَ، طَلَاقُ الثَّلَاثِ وَاحِدَةً- فَقَالَ عُمَرُ ابْنُ الْخَطَّابِ اِنَّ النَّاسَ قَدِ اسْتَعْجَلُوْا فِىْ اَمْرٍ قَدْ كَانَتْ لَهُمْ فِيْهِ اَنَاةٌ فَلَوْ اَمْضَيْنَاهُ عَلَيْهِ فَاَمْضَاهُ عَلَيْهِمْ-

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்திலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலக்கட்டத்தின் ஆரம்ப நாட்களில் முதல் இரண்டு வருடங்கள் வரையிலும் ஒரே அமர்வில் கொடுக்கப்படுகின்ற மூன்று தலாக்குகள் ஒரு தலாக்காகவே கருதப்பட்டு வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், மக்கள் தலாக் தொடர்பான விவகாரத்தில் அவசரம் காட்டுகின்றனர். ஆனால், அவர்களுக்கு இவ்விஷயத்தில் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அத்தகைய அவசரக்காரர்களாக இருக்கின்ற மக்களுக்கு அவர்களது தரப்பிலிருந்து ஒரே சபையில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகளை மூன்று என்றே கருதியவாறு அதற்கான கட்டளையை நாம் ஏன் நிறைவேற்றக் கூடாது? என்று கேட்டார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தான் கூறியது போன்றே செய்தார்கள்.

ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகள் மூன்று தலாக்குகளாகவே ஆகி விடுகின்றது என்பதற்கு ஹனஃபிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது இந்த தீர்ப்பிலிருந்து ஆதாரம் காட்டுகின்றனர். இந்த ஹனஃபிகளுக்கு எதிரில் அறிஞர்களில் ஒரு பிரிவினர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த தீர்ப்பு தண்டனை வழங்கும் வடிவில் உள்ளது என்றும் அது தற்காலிக -மானது என்றும், நிரந்தரமானதும் மறுமை வரையிலும் நடைமுறைப்படுத்தத் தகுதி வாய்ந்ததுமாக இருப்பது திருக்குர்ஆனின் போதனையே ஆகும் என்றும் கூறுகின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்தும் இதுவே ஆகும்.

Fiqha Ahmadiyya Personal Law -ல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. “ஆதாரப்பூர்வமான அறிவிப்புகளிலிருந்து இவ்விஷயம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலக் கட்டத்திலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலக்கட்டத்தின் ஆரம்ப நாட்களில் முதல் இரண்டு வருடங்கள் வரையிலும் ஒரே சபையில் கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகள் ஒரு தலாக்காகவே கருதப்பட்டது. ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷரீஅத் கொடுத்திருக்கின்ற ஒரு வசதியை சில அறிவீனமான மக்கள் கேலிக்குரியதாக ஆக்கி விட்டனர் என்பதை உணர்ந்ததும் இவ்விஷயத்தில் அவசரம் காட்டுகின்ற மக்கள் பிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகளை மூன்று தலாக்குகளாகவே கருத வேண்டும். அதன் மூலம் மக்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்று கருதினார்கள். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்தக் கட்டளை தண்டனையின் வடிவத்தைக் கொண்டதாகும். இதனை நிரந்தரமான கட்டளையாக ஆக்கி விட முடியாது.

(ஃபிக்ஹா அஹ்மதிய்யா பர்ஸனல் லா பக்கம் 80)

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
◗ Panchagavya
◗ Pest Repeller
◗ See Veed Extract
◗ All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

ஒரு முஸ்லிம் ஆணுக்கு மூன்று தலாக் கொடுப்பதற்கான உரிமையை ஷரீஅத் கண்டிப்பாக வழங்கியிருக்கின்றது. ஆனால் ஒரே அமர்வில் மூன்று தலாக்கையும் பயன்படுத்துவதற்கான உரிமையை அது அவருக்கு வழங்கவில்லை. மாறாக, வெவ்வேறான மூன்று சந்தர்ப்பங்களில் அவற்றை பயன்படுத்துவதற்கான உரிமையை அது அவருக்கு வழங்கியிருக்கின்றது.

உண்மையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் படிப்படியாக மூன்று தலாக் கொடுப்பதற்கான உரிமையை வழங்கியிருப்பது ஷரீஅத் ஓர் ஆணின் மீது செய்துள்ள பேருபகாரமாகும். அதாவது, நிரந்தரமான பிரிவிற்கு முன்னதாக ஆணுக்கு மீண்டும் மீண்டும் சிந்திப்பதற்கும் விஷயத்தைப் புரிந்து கொள்வதற்குமான சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கின்றது. முத்தலாக்கின் விளைவாக அறியாமையினாலும் தவறாகவும் எடுக்கப்பட்ட ஒரு முடிவை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காகவே ஷரீஅத் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கின்றது. தலாக்கிற்குப் பிறகு அது பற்றிய வருத்தமும் வேதனையும் ஏற்பட்டால் குறைந்தபட்சம் சீர்த்திருத்தத்திற்காக ஒரு சந்தர்ப்பமாவது கையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருந்தால் வருந்தி திருந்திய பிறகும் கூட ஷரீஅத் அவர் சீர்திருந்துவதற்கான எந்த சந்தர்ப்பத்தையும் வழங்கவில்லை என்று சுயமே ஷரீஅத்தின் மீதே ஒரு மிகப்பெரும் ஆட்சேபனை எழும். ஆனால் ஷரீஅத் செய்துள்ள பேருபகாரத்தை அறிவீனர்-களான ஆலிம்களும் பொதுமக்களும் கேலிக்கு உரியதாக ஆக்கி விட்டனர். கருணை நிறைந்த ஒரு கட்டளையை சுயமே தங்கள் மீது சாபமாக அவர்கள் ஆக்கிக் கொண்டனர்.

திருமணம் மிகவும் புனிதமான உடன்படிக்கை ஆகும். இந்த புனித உடன்படிக்கையை மிக சாதாரணமான காரணங்களுக்காகவும் சண்டைகளின் காரணமாகவும் முறித்துக் கொள்வது ஒருபோதும் ஷரீஅத்தின் விருப்பமாக இருக்க முடியாது. கணவனும் மனைவியும் எந்நிலையிலும் ஒன்றாக இருப்பது சாத்தியம் அற்றதாக ஆகி விடுகின்ற மிகவும் நிர்பந்தமான ஒரு நிலைமையில்தான் ஷரீஅத் இந்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்குகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தலாக் கொடுப்பதை மிகவும் வெறுத்துள்ளார்கள். அவர்கள் கூறினார்கள்: أَبْغَضُ الْحَلَالِ إِلَى اللّٰهِ الطَّلَاقُ "அனுமதிக்கப்பட்ட மற்றும் ஆகுமான காரியங்களில் எல்லாவற்றிற்கும் அதிகமாக அல்லாஹ்விற்கு விருப்பமில்லாதது தலாக் ஆகும்" (அபூதாவூது கிதாபுத் தலாக் பாபு ஃபீ கராஹியதித் தலாக்)

நாம் மீண்டும் இவ்விஷயத்தைக் கூறிக் கொள்கின்றோம். திருமணம் செய்திருப்பதால் ஆணுக்கு முத்தலாக் கொடுப்பதற்கான உரிமை கண்டிப்பாக கிடைக்கின்றது. ஆனால் ஷரீஅத் ஆணுக்கு ஒரே சமயத்தில் தனது மனைவிக்கு மூன்று தலாக் கொடுப்பதற்கான அனுமதியைத் தரவில்லை. ஒரு முஸ்லிம் ஆண் தனது மனைவிக்கு தலாக் கொடுக்க விரும்பினால் அவர் ஒரு தலாக்குதான் கொடுக்க வேண்டும். நாவினாலோ அல்லது எழுத்து மூலமாகவோ தனது மனைவிக்கு தலாக் கொடுப்பது பற்றிய தகவலைத் தெரிவிக்க வேண்டும். அதற்கு சாட்சியை நியமித்துக் கொள்ள வேண்டும். தகவல் கிடைத்த பிறகு தலாக் அமலுக்கு வருவது ஆரம்பமாகி விடுகின்றது. இப்போது ஆணுக்கு மூன்று மாத காலஅவகாசம் இருக்கின்றது. இந்த மூன்று மாதங்களுக்குள் அவர் விரும்பினால், தான் கொடுத்த தலாக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது தலாக்கிலிருந்து திரும்பி விடலாம். இதனை ஃபிக்ஹாவின் மரபுச் சொல்லிற்கு ஏற்ப 'தலாக்கே ரஜஈ' என்று கூறுவர். அவர் திரும்பவில்லை என்றால் மூன்று மாதங்கள் முடிவடைந்ததும் தலாக் நிகழ்ந்து விடும். இதனை ஃபிக்ஹாவின் மரபுச் சொல்லிற்கேற்ப 'தலாக்கே பாயின்' என்று கூறுவர். பாயின் தலாக் என்பதன் பொருள் முற்றிலும் நிறைவேற்றப்பட்டு விட்ட தலாக் ஆகும். அதில் கணவருக்கு மீண்டும் திரும்புவதற்கான எந்தவொரு சந்தர்ப்பமும் எஞ்சி இருக்காது. எனினும், ஆண் புதிதாக நிக்காஹ் செய்து கொள்வதன் மூலமாக மீண்டும் அந்த மனைவியை தனதாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு இந்த இரண்டு நிலைகளிலும் ஆணின் தரப்பில் இருந்து ஒரு தலாக்கே நிகழ்கின்றது. அவன் தலாக்கை திரும்பப் பெற்றுக் கொண்டாலும் சரி அல்லது அவன் திரும்பாத நிலையில் தலாக்கே பாயின் நடந்து விட்டாலும் சரி அவன் தரப்பிலிருந்து ஒரு தலாக்கே நிகழ்கின்றது.

நாம் மேலே கூறியுள்ள வழிமுறைதான் தலாக் கொடுப்பதற்கு ஷரீஅத் கூறியுள்ள வழிமுறையாகும். முதலில் நாவினால் அல்லது எழுத்தின் மூலமாக தலாக் கொடுப்பதற்கு முன்னதாக ஆணுக்கு பல இலக்குகளைக் கடந்து வர வேண்டியது இருக்கின்றது. அதில் சமாதானம் செய்து கொள்வதற்கான முழுமையான முயற்சி செய்யப்படுகின்றது. கணவர் வீட்டிலிருந்து ஒருவரையும் மனைவி வீட்டிலிருந்து ஒருவரையும் நியமித்து அவர்கள் பொதுவாக இருவருக்கும் இடையில் சமாதானம் செய்து வைக்க முயற்சி செய்வர். இதற்குப் பிறகு ஆண் தலாக் கொடுத்து விட்டாலும் கூட அவருக்கு சிந்தனை செய்வதற்கும் தன்னை ஆய்வு செய்து பார்ப்பதற்கும் அவருக்கு மூன்று மாத காலஅவகாசம் கிடைக்கின்றது. அந்த காலக்கட்டத்தில் அவர் தனது மனைவிக்கு கொடுத்த தலாக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். தலாக் ஒன்றன்பின் மற்றொன்றாக கொடுக்கப்பட வேண்டும். மிகவும் கவனமாக சிந்தனை செய்த பிறகு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதன் தேவை அதிகமாக இருக்கின்றது என்றால் அதற்கேற்ப தலாக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஷரீஅத்தின் நோக்கமாக இருக்கின்றது. அது அல்லாமல் மூன்று என்ன? மூன்று இலட்சம் தலாக்குகள் கொடுப்பதற்கான உரிமை ஒருவருக்கு கிடைத்தாலும் கூட அது ஒரே சமயத்தில் கொடுக்கப்படுவதாக இருந்தால் அதனால் எந்த பலனும் ஏற்படப் போவதில்லை. சற்று சிந்தனை செய்து பாருங்கள். மூன்று தலாக்குகளையும் ஒன்றாக ஒரே சமயத்தில் கொடுக்கலாம் என்பது ஷரீஅத்தின் நோக்கமாக இருக்குமென்றால் பிறகு ஒருமுறை தலாக் கூறுவதே போதுமானதாக இருந்திருக்கும். மூன்றிற்கான என்ன தேவை இருக்கின்றது? மூன்று தலாக்குகளையும் ஒன்றாக ஒரே அமர்வில் கொடுப்பதன் மூலமாக சில பிரிவுகள் நம்புவது போன்று மூன்று தலாக்குகளும் நிறைவேறி விடுகின்றது என்று வைத்துக் கொண்டால் பிறகு தனது தவறை உணர்ந்து ஒருவருக்கு வெட்க உணர்வு ஏற்படுகின்ற நிலையில் அவர் சீர்திருந்தவும் திரும்பி வருவதற்குமான எந்த ஒரு சூழ்நிலையும் அங்கு எஞ்சியிருக்கவில்லை. ஷரீஅத் ஒருவன் தன் தவறை உணர்ந்து திரும்பி வருவதற்கான எந்தவொரு வழியையும் திறந்து வைக்கவில்லை என்று ஷரீஅத்தின் மீது ஒரு குற்றம் சுமத்தப்படும். எனவே, திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் அடிப்படையில் ஒன்றாக மூன்று தலாக் கொடுப்பதற்கு ஷரீஅத்தில் எந்த ஒரு தகுதியும் இல்லை. எவராவது அறியாமை-யினால் ஒன்றாக மூன்று தலாக்குகளைக் கொடுத்தாலும் கூட அது மூன்று தலாக்குகளாக அல்லாமல் ஒரு தலாக்காகவே ஏற்றுக் கொள்ளப்படும்.

திருக்குர்ஆனில் இது பற்றிய தெளிவான கட்டளை இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

اَلطَّلَاقُ مَرَّتٰنِ فَاِمۡسَاكٌۢ بِمَعۡرُوۡفٍ اَوۡ تَسۡرِيۡحٌۢ بِاِحۡسَانٍ

(மீண்டும் இணையத்தக்க) மணவிலக்கு இரு முறைகளே. அப்போது நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மூன்றாவது தலாக் பற்றி எங்கே கூறப்பட்டிருக்கின்றது? என்று கேட்டனர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அது பற்றி பின்னர் தக்க முறையில் (மணவிலக்கு பெற்ற பெண்களைத்) தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது நன்முறையில் அனுப்பி வைக்க வேண்டும் (2:230) என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்-கின்றது என்று கூறினார்கள்.

இங்கு 'மர்ரதானி' அதாவது இரு முறைகள் என்பதன் பொருள், 'மர்ரத்தன் ப:்த மர்ரத்தின்'

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**

மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**

மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

### திருக்குர்ஆனிலிருந்து...

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
*METAPLAST*
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
**S.S. அஸன் அபூபக்கர்**
✆ 94869 37769

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் -களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 31 August 2017 Issue No. 35

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

அதாவது, ஒன்றன்பின் ஒன்றாக இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அந்த தலாக் கொடுக்கப்பட வேண்டும். மூன்றாவது தலாக்கிற்குப் பிறகு தம்பதியரிடையே நிரந்தரமான பிரிவு ஏற்பட்டு விடும். பிறகு அந்த கணவனும் மனைவியும் حَتّٰى تَنْكِحَ زَوْجًا غَيْرَهٗ "அவன் அல்லாத இன்னொருவனை அவள் திருமணம் செய்து கொள்கின்ற வரை" என்ற திருக்குர்ஆனின் கட்டளை நிறைவேறாத வரை ஒருபோதும் தமக்கிடையில் திருமணம் செய்து கொள்ள முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "மூன்று தலாக்குகளும் ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்டிருந்தால் அதன் மூலமாக அந்த கணவனுக்கு அவனது மனைவி இத்தாவை கழித்த பிறகும் கூட அவளை திருமணம் செய்து கொள்ளலாம் என்ற பயன் தரப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், இந்த தலாக் அனுமதிக்கப்படாத தலாக்காக இருந்தது. உண்மையில் திருக்குர்ஆனை சிந்தித்துப் பார்க்கும்போது பழைய தொடர்புகளையுடைய கணவனும் மனைவியும் தங்களுக்கிடையிலுள்ள தொடர்புகளை கை விட்டு விட்டு தனித்தனியாக பிரிந்து சென்று விடுவது இறைவனுக்கு மிகவும் விருப்பமில்லாத விஷயமாக இருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதன் காரணமாகவே அவன் தலாக்கிற்கென்று பெரும் பெரும் நிபந்தனைகளை விதித்திருக்கின்றான். இடைவெளி விட்டு மூன்று தலாக்குகளைக் கொடுப்பது, கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் போன்ற இந்த எல்லா விஷயங்களும் ஒருவேளை ஏதாவது ஒரு சமயத்தில் அவர்களது உள்ளத்தில் உள்ள துக்கம் விலகி பரஸ்பரம் அவர்களுக்கு இடையே சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டிருக்கின்றன......

இறைவன் கூறுகின்றான்: அத்தலாக்கு மர்ரதானி அதாவது (மீண்டும் இணையத்தக்க) மணவிலக்கு இரு முறைகளே. பின்னர் தக்க முறையில் (மணவிலக்கு பெற்ற பெண்களை) தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது நன்முறையில் அனுப்பி வைக்க வேண்டும். (2:230) இவ்வளவு நீண்ட காலம் கழிந்த பிறகும் கூட அவர்களுக்கு இடையில் சமாதானம் ஏற்படவில்லையென்றால் அவர்களிடம் சீர்திருத்தம் ஏற்படுவது சாத்தியமற்றதாகும்." (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 213; 2003 ஆம் ஆண்டு பதிப்பு - காதியானில் அச்சிடப்பட்டது)

சந்தேகமின்றி சில பிரிவுகள் ஒரே சமயத்தில் ஒன்றாக கொடுக்கப்பட்ட மூன்று தலாக்குகளை மூன்று தலாக்குகள் என்று ஏற்றுக் கொண்டவாறு அதனை தலாக்கே பத்தா என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதாவது அவ்வாறு தலாக் கொடுத்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிரந்தரமான பிரிவு ஏற்பட்டு விடுகின்றது. ஆனால் இது இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் எதிரானதாகும். மனிதன் எடுத்து வைக்கின்ற முதல் அடி தவறாக இருக்கின்றபோது அவனது அடுத்த அடியும் தவறாகவே இருக்கின்றது. பிறகு அத்தகைய பித்அத்துகளைப் பின்பற்றிச் செல்வதன் விளைவாக முஸ்லிம்கள் மத்தியில் ஹலாலா போன்ற மிகவும் மோசமான வெட்கங்கெட்ட சடங்குகள் உருவாகியிருக்கின்றன. பெயர்தாங்கி ஆலிம்கள் அப்பாவிகளான ஒன்றுமறியாத பொதுமக்களை அழிவின் குழியின் பக்கம் விரட்டி அடிக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. மேலும் அவர்கள் காலத்தின் இமாமான மஸீஹையும் மஹ்தியையும் ஏற்றுக் கொண்டு தமது உலகையும் மறுமையையும் சரிசெய்பவர்களாக ஆகட்டும்!

*(தொடரும்....)*

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அவர் உண்மையின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதே நிபந்தனையாக இருந்தது. அவர் முஸ்லிமாகி விட வேண்டும் என்று முன்னறிவிப்பில் எதுவும் கூறப்படவில்லை. அவர் மிகுந்த பணிவுடன் உண்மையின் பக்கம் திரும்பியதனால் இறைவனும் கருணையுடன் அவர் பக்கம் திரும்பினான். ஆத்தம் இஸ்லாத்தை தழுவாத வரை அழிவிலிருந்து தப்பிக்க முடியாது என்பது இறையறிவிப்பின் நோக்கமாக இருக்கவில்லை. ஏனென்றால், இஸ்லாத்தை மறுப்பதில் எல்லா கிறித்தவர்களும் பங்கு பெற்றுள்ளனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு அது எவரையும் நிர்பந்திக்கவில்லை. மேலும் இன்ன நபர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் இந்த கால அளவிற்குள் இறந்து விடுவார் என்று முன்னறிவிப்பு செய்வதும் கூட முற்றிலும் அறிவுக்குப் புறம்பானதாகும். இஸ்லாத்தை மறுக்கின்ற அத்தகைய மக்களால் உலகம் நிரம்பி காணப்படுகின்றது. நான் ஏற்கனவே மீண்டும் மீண்டும் எழுதியிருப்பது போன்றே இஸ்லாத்தை மறுப்பதால் மட்டும் இவ்வுலகில் எவர் மீதும் எந்த தண்டனையும் வர முடியாது. மாறாக, இந்த பாவத்திற்கான கேள்வி கேட்கப்படுவது மறுமையில் மட்டுமே நடைபெறும். அவ்வாறிருக்க இஸ்லாத்தை மறுத்ததனால் அவரது மரணம் பற்றி முன்னறிவிப்பு செய்வதற்கும் மற்றவர்கள் தொடர்பாக அப்படிப்பட்ட முன்னறிவிப்பை செய்யாமல் இருப்பதற்கும் ஆத்தமிடம் அப்படி என்ன தனிச்சிறப்பு இருக்கின்றது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மகிமைக்கு எதிராக அன்னார் தொடர்பாக தஜ்ஜால் என்ற சொல்லை அவர் பயன்படுத்தியது மட்டுமே முன்னறிவிப்பிற்கான காரணமாக இருந்தது. அந்த சொல்லைக் கூறுவதிலிருந்து விலகி அவர் அறுபது அல்லது எழுபது மனிதர்களின் முன்னிலையில் உண்மையின் பக்கம் திரும்பி விட்டார். அந்த சபையில் இருந்த பலரும், நல்லியல்பு உள்ளவர்களும் கண்ணியத்திற்கு உரியவர்களுமாவர். இன்னும் சொல்வதென்றால், இந்த சொல்லை சொல்வதிலிருந்து விலகி உண்மையின் பக்கம் திரும்பிய பிறகும் கூட அவர் அழுது கொண்டேயிருந்தார். அதனால் இறைவன் பார்வையில் கருணை காட்டப்படுவதற்கு தகுதியுள்ளவராக அவர் ஆகி விட்டார். ஆனால் அது இந்த அளவிலேயே இருந்தது. அதாவது, அவரது மரணம் நிகழ்வதில் சில மாதங்கள் வரை காலதாமதம் ஏற்பட்டது. மேலும் எனது வாழ்நாளிலேயே அவர் மரணித்து விட்டார். ஒரு முபாஹலாவின் வடிவில் இருந்த அந்த விவாதத்தின் அடிப்படையில் அவர் தனது மரணத்தின் காரணமாக பொய்யரென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றார். அவ்வாறிருக்க, இதுவரை அந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லையா என்ன ? சந்தேகமின்றி அது நிறைவேறி விட்டது. மிகவும் தெளிவாக அது நிறைவேறி விட்டது. அத்தகைய தெளிவான அடையாளங்கள் பற்றி ஆட்சேபனை செய்வதிலிருந்து விலகாமல் இருக்கின்ற அத்தகைய உள்ளங்கள் மீது இறைவனின் சாபம் இருக்கின்றது. அவர்கள் விரும்பினால் ஆத்தம் உண்மையின் பக்கம் திரும்பி விட்டார் என்பதற்கு ஏறக்குறைய நாற்பது மனிதர்களை நான் சாட்சிகளாக முன் வைக்க முடியும். இதன் காரணமாகவே அவர் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறவில்லை. ஆனால், எல்லா கிறித்தவர்களும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறி வந்துள்ளனர். சுயமே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறியுள்ளார்கள். எனவே, நமக்கு இந்த விவாதத்தை நீளமாக்க வேண்டிய தேவையில்லை. ஆத்தம் இப்போது உயிருடன் இல்லை. அவர் இறந்து பதினோரு வருடங்களுக்கும் அதிகமான கால அளவு கழிந்து விட்டது.

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 221-223)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad